செ.வெ.எண்: 37 நாள்: 27.08.2020

**கரூர் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானியம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

**இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தாவது:**

கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறையின் மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ.223.198 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 40ரூ மானியத்தில் மா, கொய்யா, பப்பாளி மற்றும் எலுமிச்சை கன்றுகள், தக்காளி, கத்தரி மற்றும் மிளகாய் குழித்தட்டு நாற்றுகள், முருங்கை கன்று, கறிவேப்பிலை கன்று, மல்லிகை மற்றும் உச்சிப்பூ கன்று, காய்கறி விதைகள், பவர் ஸ்நேப்சாக் தெளிப்பான் (Powered Knapsack Sprayer), தேனீ வளர்ப்புப் பெட்டி மற்றும் மண்புழு உரம் உற்பத்தி செய்வதற்கான மானியம் வழங்கப்படவுள்ளது.

மேலும் தக்காளி, கத்தரி மற்றும் மிளகாய் குழித்தட்டு முறையில் நாற்றுகள் உற்பத்தி செய்து மானிய விலையில் இலவசமாக வழங்கப்படவுள்ளது. அதிகபட்சமாக 2 ஹெக்டர் வரை வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உழவன் செயலி மூலமாக விண்ணப்பிக்கலாம்.

மேலும் விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்வதற்கான அலைபேசி எண்கள் தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள் கரூர் 9751678794, 7904493818, தாந்தோணி-9790107117, 9597636982, அரவக்குறிச்சி மற்றும் க.பரமத்தி 9843643170, 9787707051, கிருஷ்ணராயபுரம் மற்றும் குளித்தலை 9994629884, 9047972919, 7708742596, தோகைமலை 9750262060, 7639484131 மற்றும் கடவூர் 9445117941, 9443751626 என்ற எண்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**